372

தருமசீ

பத்திராதிபர்: தி. ஆதிநயினர்.

புத்தகம். 6 | உருத்திரோத்காரிஸூ பங்குனிமூ. 1924ஸூ மார்ச்சுமூ | சஞ்சிகை 12.

விஷய சூசிகை.

விஷயம்.	பக்கம்.
1. நீதிச் செய்யுட் சிந்தாமணி ...	249
2. சோம்ப ரென்பவர் எம்பித்திரிவர் ...	250
3. தருமசீலன் 6-வது ஆண்டு நிறைவு ...	251
4. தருமசீலன் 6-வது வருடப் பூர்த்தியின் வாழ்த்து.	252
5. இரகு வம்சம் ...	253
6. ப்ரஸ்னோத்தர மாணிக்யமாலா ...	261
7. ஜைன சித்தாந்த ப்ரவேசிகா ...	265
8. சிக்ஷண ...	266
9. விருஷபஸ்வாமி குறவஞ்சி ...	267
10. கீர்த்தனைகள் ...	269
11. செய்யுட் கதைகள் ...	271

வருஷசந்தா ரூபா 1.] 1924. [தனிப்பிரதி அணா 0-2-0

DHARMASEELAN PRESS. MADRAS

...ம் வெளிவரும். இதில்,
...ளில் வெளிவராத நூல்கள்,
...ந்திகள், வியாசங்கள், பலவிநோ
... வர்த்தமானங்கள் முதலிய பல அரி
...யும்.

...சந்தா விவரம்.

...க்குத் தபாற்செலவு உட்பட இந்தியா, பர்மா,
... இடங்களுக்கு ரூபா 1—0—0

...னங், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய இடங்களுக்கு
... 1—4—0; தனிச் சஞ்சிகை விலை அணு 0—2—0.

கவனிப்பு.

1. சந்தாதாரராகச் சேருகிறவர்கள் தங்கள் முழுவிலாசத்தையு ம்சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்.

2. முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும்; ஒரு வருஷத்துக்குக் குறைந்து பத்தி ரிகை கொடுக்க முடியாது; ஒரு வருஷத்துக்கிடையில் சந்தாதாரர் கள் சேர்ந்தால் அவர்களுக்கு முந்தின மாதங்களின் சஞ்சிகைகளும் சேர்த்தனுப்பப்படும்.

3. சந்தாதாரர்கள் கடிதமெழுதினால் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்வோர் கடிதத்தில் ஓரே பக்கத்தில் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்; தூஷணையான விஷயங்களை எழுதலாகாது; பொது நன்மையான விஷயங்களே எழுதவேண்டும்; விஷயங்களைத் திருத்திக்கூட்டவும் குறைக்கவும் நமக்குப்பாத்தியமுண்டு; வியாசக்காரர் அபிப்பிராயங்கள் நம்மைச் சார்ந்தவைகளல்ல; விஷயதானஞ் செய்வோர் தங்கள் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாதத்திற்கு	ரூபா	10—0—0
அரைப்பக்கத்திற்கு	ரூபா	6—0—0
கால் பக்கத்திற்கு	ரூபா	3—0—0

விளம்பரத்தொகையை முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

தி. ஆதிநயினார், "தருமசீலன்" ஆபீஸ்.
26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

ஓம்

தருமசீலன்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 6	உருத்திரோற்காரி௵ பங்குனி௴ 1924௵ மார்ச்சு௴	சஞ்சிகை 12.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

தவமும், இறைவர் பூசனையும்.

"ஓவா திரண்டுவவு மட்டமியும் பட்டினிவிட் டொழுக்கங்காத்தல்
தாவாத்தவமென்றார் தண்மதிபோல் முக்குடைக்கீழ்த் தாதைபாதம்
பூவே புகைசாந்தஞ் சுண்ணம் விளக்கிவற்றால் புனைதல் நாளும்
ஏவா விவைபிறவும் பூசனையென் றீண்டியநூல் கரைகண்டாரே."

(இ-ள்.) "தர்மமார்க்கங்கள் நெருங்கியிருக்கின்ற ஆகமநூலைக் கற்றுத் தேறி அதன் கரைகண்ட முனிவர்கள், குளிர்ந்த மதிபோலும் முக்குடையின் நிழலின் கீழ் வீற்றிருக்கின்ற தந்தையாகிய அருகக் கடவுளின் பாதத்தே, தினந் தோறும் புஷ்பம், வாசனைப்புகை, சந்தனம், வாசனைப்பொடி, விளக்கு ஆகிய இவற்றால் சிறப்புச் செய்தலும், இன்னும் இவை யொழிந்த பிறவற்றால் சிறப்புச் செய்தலும் ஆகிய இவைகளே பூசனையென்று சொல்லி, அமாவாசை, பௌரணமி ஆகிய இரண்டு உவாக்களிலும், அட்டமியிலும் பட்டினியாக உணவைவிட்டு நீங்காது ஒழுக்கங்காத்தலைக் கெடாததவ மென்றார்கள். ஆகலின், இவ்விருவகைகளையும், இறைவர் பூசனையென்றும், தவமென்றும் கண்டு கொள்க" என்பதாம்.

ஆகமம்-அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதியாகமம் என மூன்றாம். இவற்றுள் அங்காகமம்-12-ம், பூர்வாகமம் 14-ம், பகுசுருதியாகமம் 16-ம் ஆகும். முக்குடை-சந்திராதித்தியம், நித்திய விநோதம், சகல பாசனம் என்பனவாம். பூ முதலியவற்றால் புனைதலாவது-பூவாலும். சந்தனத்தாலும், வாசனைப் பொடியாலும் அருச்சித்து, அகில், சாம்பிராணி முதலியவற்றால் தூபாராதனை செய்து, கற்பூர தீபத்தாலும், விளக்காலும் தீபாராதனை செய்தலாம். உவவு-அமாவாசை, பௌரணமி. அமாவாசை - அமரபக்ஷத்துப் பதினைந்தாந்திதி; பௌரணமி-பூர்வபக்ஷத்துப் பதினைந்தாந்திதி. அட்டமி-இரண்டு பக்ஷத்திலும் வரும் எட்டாந்திதி. இவற்றில் பட்டினியிருந்து ஒழுக்கத்தைக் காத்தலே தவமாம். உவவு-என்பதற்குச் சதுர்த்தசி யென்று பொருள்கொண்டு, சதுர்த்தசியிலும், அட்டமியிலும் பட்டினியிருத்தலெனவுங் கொள்ளுதலுண்டு. இதன் பயன், முறையே 14வதாகிய அயோகி குணஸ்தானத்தை அடைதலும், எண் வினைகளைக் கெடுத்தலுமாம். ஓவாது-நீங்காமல். தாவா-கெடாத. ஏவா-ஏவி; சொல்லி யென்பது இதன் பொருளாம்; ஏவா என்பது செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

(சீவகசிந்தாமணி 1547)

21456.

தருமசீலன்.

உருத்திரோற்காரிஸு பங்குனிமீ.

"சோம்ப ரென்பவர் எம்பித்திரிவர்."

இதன் பொருள் :—"சோம்பர் என்பவர்-(தொழில் செய்வதிலே) சோம்பலுடையவரென்று சொல்லப்படுபவர், எம்பி-(தரித்திரத்தால்) மெலிந்து, திரிவர்-(பசிக் கொடுமையால் வீடுகள் தோறும் சென்று ஆகாரம் கேட்டிரந்துகொண்டு) திரிந்தலைவார்கள்" என்பதாம்.

உலகத்திலே சோம்பலின்றி எத்தொழிலிலும் பிரவேசித்துச் சுறுசுறுப்புடன், ஆரம்பித்த தொழில்களை முடிப்பார்க்கு மிக்க ஊதியம் கிடைக்கும். அந்த இலாபப் பொருளைக்கொண்டு நல்லாடை கட்டி, நல்லுணவுண்டு, நற்பணிபூண்டு, இன்னும் பல உலக இன்பங்களை யெல்லாம் அனுபவித்தற்கு ஏதுவுண்டாகும். மேலும் அவர்கள் அப்பொருளைக்கொண்டு நல்ல தானதருமங்களைச்செய்து அவற்றின் பயனாக மறுமை யின்பத்தையும் அடையலாம். எப்பொழுதும் சோம்பலுற்று ஒரு தொழிலையும் செய்யாமல் திண்ணையில் படுத்துறங்குபவர்களிடத்தில் இலக்குமி விலகி விடுவாள்; மூதேவி குடி யேறுவாள்; அதனால் எவ்வித வரும்படிக்கும் இடமில்லாமற் போகும். அங்ஙனம் வரும்படியில்லாமற் போகவே, அவர்களுக்குச் சட்டிக்கொள்ள நல்ல துணி அகப்படாது; அணிய ஆபரணம் அகப்படாது; உண்ண உணவகப்படாது; படுக்கப்பாயுமில்லாமற் போகும். இவ்விதம் சௌகரியங்களெல்லாம் குறையவே, அவர்கள் தேகம் மெலிந்துபோகும்; உடம்பிற் பல வியாதிகளுண்டாம்; வியாதி யுண்டானாலும் பொருட் செலவுசெய்து அதனைத் தீர்த்துக்கொள்ள முடியாது. அதனால் தேகத்தில் அழகு குன்றும்; பசிப்பிணி அதிகரிக்கும். பசியைத் தணித்துக் கொள்வதற்கு அவர்கள் வீடுகள் தோறும்சென்று ஆகாரம் இரந்துண்ண வேண்டிய நிலைமை யுண்டாகிவிடும். இந்நிலைமை வருவது சாதாரணமான மனிதர்களுக்கு மாத்திரமன்று. முன்னோர்கள் தேடி வைத்த பொருளை வைத்துக் கொண்டிருப்பவர்களும், "நமக்குத் தான் பொருளிருக்கின்றதே; நாம் எதற்காகத் தொழில் செய்ய

வேண்டும்" என்று சோம்பி யிருந்தால், அப்படி யிருப்பவர்களுக் குங்கூடச் சீக்கிரம் இந்நிலைமை வந்துவிடும். எப்படியெனில் அவர் கள் சோம்பலுற்றிருந்து கொண்டு கைபபொருளைச் செலவுசெய்து வருவார்கள். கொஞ்சக் காலத்திற்குள் அப்பொருள் முழுதும் செ லவாகிவிடும்; அதன்மேல் அவர்களுக்கும் தரித்திரம் வந்துவிடும். ஆதலின் எத்தகையருமே சோம்பலை அகற்றி விடவேண்டும். அப் படி அகற்றாதார், மேற்கூறியபடி தரித்திரமடைந்து பலரும் பார் த்து ஏளனஞ்செய்து நகைக்கத் திரிவாரென்பது நிச்சயம். இது பற்றியே திருவள்ளுவரும்,

> "இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
> மாண்ட வுஞற்றில வர்."

என்று கூறினர். இதன் பொருளாவது: "சோம்பலை மேற்கொண்டு மாட்சிமைப்பட்ட தொழில்களைச் செய்யாதிருப்பவர், பிறர் தங்க ளைப் பார்த்து இடித்துக்கூறி இகழுஞ் சொற்களைக் கேட்பர்" என் பதாம்.

ஆகவே, சோம்பலானது, இம்மை மறுமைப் பயன்களை இழத் தற்கேதுவா யிருப்பதென்பதும், சோம்பலின்மையானது இருமைக் கும் இன்பம் பயக்கக்கூடியதென்பதும் உணரப்படும். ஆதலின், இரண்டிடத்தும் சுகம்பெற விரும்புவோர், ஔவைப் பிராட்டியார் கூறிய இந்நீதியின்படி சோம்பலை அகற்றிச் சுறுசுறுப்பை மேற் கொண்டு, நிறைந்த செல்வம்பெற்று இவ்வுலகத்திலும் மேலுலகத் திலும் இன்ப மெய்துவாராக.

(திருவருட்சகாயம்.)

தருமசீலன் 6-வது ஆண்டு நிறைவு.

ஆதிபகவன் திருவருளினாலே, நம் சீலனுக்கு இந்தப் பங்குனி மாதத்தோடு ஆறுவது ஆண்டு பூர்த்தியாகின்றது. இச்சீலன் தோன்றிய நாள்தொட்டு இந்த ஆறு வருடங்களாக, ஜைன சகோ தார்களும், மற்றைய தமிழபிமானமுள்ள நண்பர்களும், சீலனுக் குச் சந்தாதாரராகச் சேர்ந்தும், மற்றவர்களையும் சந்தாதாரராகச் சேர்த்தும் பற்பல விஷயதானங்கள் செய்தும் மேன்மேலும் உற் சாகத்துடன் சீலனை ஆதரித்துவந்தமையின், இது நாளொரு மேனி யும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து சிறந்து வருகின்றது. ஜைன சகோதரர்களில் சிறு பான்மையோர், ஜாதியபிமானத்தையும்

மதாபிமானத்தையும் கருதாமல், எவ்வகைக் காரணத்தைக்கொண்டோ சீலனைப் புறக்கணித்து வந்தபோதிலும் பெரும்பான்மையோர், "நம் தமிழ் நாட்டில் ஜைன வகுப்பைச் சார்ந்த தமிழ்ப் பத்திரிகை இஃதொன்றே நிலவி வருகின்றது; ஆதலின், இதனை நாம் பொன்னைப்போல் போற்றவேண்டும்" என்று மேன்மேலும் ஊக்கங்கொண்டு ஆதரித்துவருவதும், இதரமத நண்பர்கள் தங்களுக்குள்ள தமிழபிமானத்தால் இதனை அன்புடன் ஆதரித்துவருவதும் மிகப்பாராட்டத் தக்கனவேயாம். இவர்கள் இதுவரை சீலனை ஆதரித்து வந்ததுபோலவே எப்பொழுதும் போற்றிவருமாறு இறைவன் என்றென்றும் நல்லருள் புரிவானாக. இந்தப் பத்திரிகாபிமானிகளாகிய உத்தமர்களுக்கு நாம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

நம் சீலனுக்கு மாற்றுப் பத்திரிகை யனுப்பிக் கௌரவத்தை உண்டாக்கிவரும் பல பத்திராதிபர்களாகிய நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த வந்தனத்தை ஸமர்ப்பிக்கின்றோம்.

அடுத்த 7-வது வருடத்தின் முகற் பத்திரிகை, சந்தா நேயர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படுமாதலால், மேமீ 15வக்குள் அடுத்த ௵ சந்தாத் தொகையை அனுப்பி விடுவதோடு, பழைய சந்தா பாக்கிகளையும் செலுத்தி விடும்படி சந்தா நேயர்களை மிகவும் வணக்கமாகக் கேட்டுக் கொள்கிறோம். சந்தாத் தொகை அனுப்பாதவர்களுக்கு மாத்திரம் வி. பி. அனுப்பப்படும்.

பத்திராதிபர்.

தருமசீலன் 6-வது வருடப்பூர்த்தியின் வாழ்த்து.

நிலமண்டில வாசிரியப்பா.

செங்தமிழ் மாது சிறப்புடன் திகழச்
சந்தத முயரிய ஜைனரத் தினங்களும்
அரியபன் னீதியும் ஆடவர் மாண்பும்
தெரிவைய ரொழுக்கமும் தெய்வ வணக்கமும்
கலைபயில் இயல்பும் கனபொரு ளீட்டமும்
மலைவிலபற் பலநன் மார்க்கமும் உணர்த்தி
இருமூன் றாண்டா வெங்கணும் பரவி
வருமெழில் வளரும் தருமசீலனும்
இறைவன ருள்பெற் றென்றுமே வாழ்க
நிறைபொரு ளொடுமா நிலத்தினில் வாழ்கவே.

செம்பை. ஆறுமுகனார்.

இரகு வம்சம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-11, பக்கம் 239)

(ஏழாவது ஸர்க்கம்.)

பின்னர் விதர்ப்பராஜன், ஸாக்ஷாத் ஸுப்பிரமண்யரோடு சேர்ந்திருக்கும் தேவஸேனையைப்போல, தக்கவரனோடு சேர்ந்திருக்கும் சகோதரியை அழைத்துக்கொண்டு அரண்மனைக்குச் செல்லலாயினன். இந்துமதியைக் குறித்துத் தமது விருப்பம் நிறைவேறாமையினால் உருவங்களிலும் வேஷங்களிலும் வெறுப்புற்றுத் தம்மையே நிந்தித்துக்கொள்ளும் மன்னவர்களும் காலை வேளையிலுள்ள 'கிருகங்க'ளைப்போல் குறைவுற்ற காந்தியை யுடையவர்களாய்த் தங்களுடைய கூடாரங்களுக்குவந்து சேர்ந்தனர். அவ்விடம் 'இந்திராணி'யின் * ஸாந்நித்தியம் இருந்தமையால், ஸ்வயம்வரத்திற்கு இடையூறு செய்பவர்கள் ஏற்படவில்லை; அதனால் அரசர்கள் அஜனிடம் துவேஷமுள்ளவர்களாயிருந்தும் சண்டை செய்யவில்லை.

பின்பு அவ்வரன், வதூவுடன் ராஜ பாட்டையை அடைந்தனன்; அவ்விடம் எங்கும் புதிய மலர்கள் நிறைந்திருந்தன; வானவில்லைப்போல் பிரகாசமான தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன; கொடிகளின் நிழலால் வெய்யில் நீங்கியிருந்தது. பின்பு ஸ்வர்ணச் சாளரங்கள் நிறைந்த மாளிகைகளிலமர்ந்து அஜனைப் பார்ப்பதில் முயற்சியுள்ள நகர ஸ்திரீகளிடம் சாவதானமான பல சேஷ்டைகள் உண்டாயின:—விரைவாகப் பார்க்குமிடத்திற்குச் சென்றுகொண்டிருந்த பெண்ணொருத்தி, தனது கூந்தல் அவிழ்ந்து அதிலுள்ள மாலையும் நழுவிவிழுந்தும், அதைக்கையினால் பிடித்துக்கொண்டவளாய், சாளரத்தருகே செல்லும் வரையில் அதைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்பதையே மறந்து விட்டனள். மற்றொரு மங்கை, சேடி தன் காலைப் பிடித்துக்கொண்டு கோலமிட்ட செம்பஞ்சுக் குழம்பு காயாமலிருக்கையில், அக்காலை உதறிக் கொண்டு மந்தகமனத்தையும் விட்டு, நடந்துவந்து, சாளரம் வரையிலுள்ள வழியைச் செம்பஞ்சுக் குழம்பினால் அடையாளமுள்ளதாகச் செய்தனள்.

இன்னொரு ஏந்திழை, முதலில் வலது கண்ணுக்கு மைதீட்டி இடது கண்ணுக்கு மைதீட்ட மறந்தவளாய், சலாகையையும் எடுத்

---

* ஸாந்நித்தியம் = இருப்பு.

துக்கொண்டு சாளரத்தின் சமீபத்திற்கு வந்தாள். பின்னொரு காரிகை, சாளரத்தின் வாயிலிற் பார்வையைச் செலுத்தினவளாய், வேகமாய் வந்தமையால் நழுவின சேலையின் முடிச்சையும் இறுக்கிக் கொள்ளவில்லை; ஆனால் அவள் தன் கையினால் சேலையைப் பிடித்துக்கொண்டே நின்றனள்; அதனால் அவளது கரத்திலுள்ள ஆபரணங்களின் காந்தி, நாபியில் பிரவேசித்திருந்தது. வேறொரு வனிதை, பரபரப்புடன் எழுந்திருந்தமையால், ஒட்டியாணத்தில் பாதி கோத்திருந்த முத்துக்கள் அடிக்கடி நழுவி விழுந்து விட்டன; அதனால் அப்பொழுது ஒட்டியாணத்தின் நூலே பெருவிரலடியில் மிஞ்சியது.

அப்பொழுது மிகுந்த மகிழ்ச்சியுற்ற மங்கையர்கள், மதுகந்தத்தையுடையவைகளும், அசையும் கண்களையே வண்டுகளாகக் கொண்டவைகளுமான தமது முகங்களால் சாளரங்களின் இடைவெளிகளை மறைத்தனர்; அதனால் அச்சாளரங்கள் தாமரை மலர்களால் நிறைந்தவைபோல விளங்கின. பின்பு அப்பெண்கள் யாவரும் அஜனைக் கண்களால் பார்க்கும்பொழுது மற்ற எவ்விஷயத்தையும் அறியவில்லை; அதனால் அம்மாதர்களின் மற்ற இந்திரியங்களின் வியாபாரமும் முழு ஸ்வரூபத்துடன் நேத்திரேந்திரியத்திலேயே பிரவேசித்தது போலிருந்தது.

அப்பால் நகரஸ்திரீகள், "இந்துமதி பரோக்ஷமான (பார்க்கப் படாத) பார்த்திபர்களால் வரிக்கப்பட்டிருந்தும், அவள் சுயம் வரத்தையே ஹிதமாக நினைத்தது தகுதியானதே. இன்றேல், இந்துமதி லக்ஷ்மிதேவி 'நாராயண'னைப் பெற்றதுபோல, தனக்குத்தக்க மனோகரமான கணவனை எவ்வாறு பெறுவாள்? விரும்பத்தக்க சோபையையுடைய இவ்விருவரையும் பரஸ்பரம் சேர்த்து வைக்காவிடில், * பிரஜாபதி இத்தம்பதியிடம் அழகிய வுருவத்தை ஸ்ருஷ்டிப்பதில் கொண்ட முயற்சி, வீணேயாகுமன்றோ? 'இரதி'யும் 'மன்மத'னும் ஆகிய இருவருமே இத்தம்பதிகளாக உண்டாகி யிருக்கின்றனரென்பது திண்ணம்; இந்துமதி ஆயிரக்கணக்கான அரசர்களிருக்கையில் தனக்குத்தகுந்த கணவனைப் பெற்றுளன்றோ? ஏனெனில், மனம் முற்பிறவியின் வாசனையை யுணர்ந்து பிரவேசிக்கின்றது" என்று பேசலாயினர்.

இவ்வாறு நகரஸ்திரீகள் செவிகளுக்கு இன்பமளிக்குமாறு பேசிக்கொண்டதை 'அஜன்' கேட்டுக்கொண்டே மங்களோபசாரங்க

* பிரஜாபதி = பிரம்மதேவன்.

ளால் விளங்கும் 'ஸம்பந்தி'யின் மாளிகையை அடைந்தான். பின்பு அஜன் யானைமீதிருந்து விரைவாய் இறங்கி, 'காமரூப' தேசத்தரசன் தோளில் கையைப் போட்டுக் கொண்டவனாய், போஜராஜன் காண்பித்த நாற்கோணமான அறையில் * நாரிகளின் மனம் சென்றதுபோலப் பிரவேசித்தனன். சிறந்த சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் அஜன், விதர்ப்பராஜனளித்த இரத்தினங்களும் † 'மதுபர்க்க'மும் சேர்ந்த 'அர்க்கிய'த்தையும் இருவெண்பட்டுகளையும் வனிதைகள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது பெற்றுக் கொண்டான். புதிய சந்திரகிரணங்கள், நுரைகள் நிறைந்த கடலைக்கரையருகே கொணர்ந்து விடுவதுபோல, வணக்கமுள்ள அந்தப் புராதிகாரிகள், வெண்பட்டணிந்திருக்கும் அஜனை ‡ 'வதூ'வின் சமீபத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அவ்விடம் பூஜிக்கப்பட்டவரும் அக்னியைப் போன்றவருமான விதர்ப்பராஜனது புரோகிதர், அக்னியை நெய் முதலிய ஹோமத் திரவ்வியங்களால் மகிழ்வித்து அக்னி ஸாக்ஷியாகவே வதூவையும் வரனையும் சேர்த்துவைத்தனர். அருகேயுள்ள 'அசோக'க்கொடியின் தளிரைத் தனது தளிரால் பற்றிக்கொண்டிருக்கும் கட்டுமாமரம்போல, அந்த இராஜகுமாரன் தனது கரத்தினால் வதூவின் கையைப் பிடித்ததும் நன்கு விளங்கினான். அப்பொழுது வரனுடைய மணிக்கட்டில் மயிர்க்குச்சு உண்டாகியது; குமாரியின் விரல்களில் வேர்வை உண்டாயிற்று; அப்பொழுது அத்தம்பதிகளிடம் காதல் மன்மதனால் சமமாகப் பிரிக்கப்பட்டதுபோலிருந்தது. அன்றியும் அத்தம்பதிகளின் கடைக்கண் பார்வை, வெட்கத்தினால் சங்கோசமடைந்தது; அப்பார்வை ஒன்றுக்கொன்று சந்தித்துத் திரும்பியதாயும், ஒருவர்க்கொருவரிடம் அன்புள்ளதாயு மிருந்தது.

அத்தம்பதிமார் இருவரும் மிகுந்த 'ஜ்வாலை'யையுடைய அக்னியைச் சுற்றி வலம்வருகையில், 'மேரு'மலையின் அருகே சுற்றி வருவதும், ஒன்றுக்கொன்று சப்பந்தமுள்ளதுமான இரவும்பகலும் போல, விளங்கினர். 'நிதம்ப'த்தினால் பளுவுள்ளவளும் மதங்கொண்ட 'சகோர'த்தைப்போல் கண்களையுடையவளுமான இந்துமதி, பிரம்மாவைப்போன்ற புரோகிதர் ஏவியதும் வெட்கத்துடன் அக்னியில் பொரியை இறைத்தாள். பின்பு அக்னியிலிருந்து புனிதமான புகைகிளம்பியது; அது நெய், வன்னித்தளிர் பொரி முதலிய

---

* நாரிகள் = பெண்கள்; † மதுபர்க்கம் = விருந்தினருக்குரிய பொருள்.
‡ வதூ = மணப்பெண்;

ஹோமத் திரவ்வியங்களின் வாசனையுள்ளதா யிருந்தது; கபோலங்களில் பற்றிய அப்புகை, அப்பெண்ணுக்கு க்ஷணநேரம் 'கர்ணாபரண'மாயிருந்தது. புனிதமானபுகை அப்பெண்ணின் முகத்தில் படிந்தது. அதனால் கண்களிலிருந்து, மையைக் கரைத்துக் கொண்டு கண்ணீர் பெருகியது; அப்பொழுது வாடிய * யவையின் முளையே கர்ண பூஷணமாயிருந்தது; அவளது கதுப்புகள் சிவந்திருந்தன. ஸ்வர்ண பீடத்திலிருக்கும் அத்தம்பதிகள் கிருகஸ்தர்களும் பந்துக்களும் அரசனும் பதிவிரதைகள் முதலியோரும் ஆசீர்வதித்துத் தூவிய 'அக்ஷதை'களைப் பெற்றுக்கொண்டனர்.

இவ்வாறு அதிக சம்பத்தைப் பெற்றுள்ள விதர்ப்பராஜன், சகோதரியின் விவாகத்தை முடித்து, ஒவ்வொரு வேந்தனையும் தனித்தனி பூஜிக்குமாறு அதிகாரிகளை ஏவினான். சந்தோஷத்தின் அறிகுறிகளால் துவேஷத்தை மறைத்துக்கொண்டிருக்கும் மன்னவர்கள், வெளியில் நிர்மலமாயும், உள்ளே மறைந்திருக்கும் முதலைகளையுடையனவாயு மிருக்கின்ற மடுக்களைப்போ லிருந்தனர். பின்பு அவர்கள் 'போஜ'னைக்கலியாணம் விசாரித்துவிட்டு, அவன் மரியாதையாகக் கொடுத்த பொருள்களை அவனுக்கே காணிக்கையாகக் கொடுத்துச் சென்றனர். தமது காரியசித்தியில் முந்தியே சங்கேதஞ் செய்துகொண்ட அரசர்கள், பிரயாணவேளையில் பெறத்தக்கவளான 'அஜன்' மனைவியைக் கிரகிக்க விருப்பமுள்ளவர்களாய் அஜன் வரும்வழியை மறைத்துக் கொண்டிருந்தனர்.

பிறகு விதர்ப்பராஜனும் சகோதரியின் விவாகத்தை முடித்து, உற்சாகத்துக்குத் தக்கபடி சீதனத்துடன் 'அஜ'னைப் பிரயாணப்படுத்தித் தானும் பின் தொடர்ந்தான். 'குண்டினபுராதிபன்' மூவுலகிலும் பிரசித்திபெற்ற 'அஜ'னோடு வழியில் மூன்று இரவுகள் வசித்து, † 'பர்வ'த்தின் முடிவில் சூரியனிடமிருந்து சந்திரன் திரும்புவதுபோல, அஜனைவிட்டுத் திரும்பினான். அரசர்கள் யாவரும் முன்பு திக்விஜயம் செய்கையில் தம்மிடம் கப்பணம் வாங்கிக்கொண்டமையால் 'இரகு'விடம் பகையுள்ளவர்களாயிருந்தனர்; ஆதலால் அவர்கள் யாவரும் சேர்ந்து, இரகுவின் புத்திரன் 'இந்துமதி'யை அழைத்துச் செல்வதைப் பொறுக்கவில்லை.

பிரஹ்லாதன், பலிச்சக்கிரவர்த்தி கொடுத்த ஸம்பத்தை ஏற்றுக்கொள்கையில் ‡ 'திரிவிக்கிரமன்'து பாதத்தைத் தகைந்தது

* யவை = ஒருவகைத்தானியம்; † பர்வம் = அமாவாஸ்யை; ‡ திரிவிக்கிரமன் = திருமால்.

போல, கொழுப்புற்ற அரசர்கூட்டம் அஜன், இந்துமதியை அழைத்துச் செல்லுகையில் அவனை வழியில் தகைந்துகொண்டது. பின்பு அஜ குமாரன், ஆப்தனென மந்திரியை மிகுந்த சேனையோடு 'இந்துமதி'யைக் காக்குமாறு ஏவிவிட்டு, "சோண * நதம்" 'கங்கை'யை எதிர்ப்பதுபோல, அரசர்களின் சேனையை எதிர்த்தனன். 'பதாதி' காலாள்களையும், தேர்ப்பாகன் தேரிலுள்ளவனையும், குதிரைப்பாகன் குதிரை மீதிருப்பவனையும், மாவுத்தன் யானை மீதிருப்பவனையும் எதிர்த்தனர். இவ்வாறு யுத்தம் சமமான எதிரியையுடையதாயிருந்தது.

வில்லாளிகள், யுத்தபேரி முழங்குகையில், வார்த்தைகளை நிச்சயிக்க முடியாமையால் தத்தம்குலத்தின் பெயரைக் கூறினார்களில்லை; ஆனால், அம்பில் செதுக்கியிருக்கும் எழுத்துக்களாலேயே பரஸ்பரம் தத்தம் பிரசித்தமான பெயரைத் தெரிவித்தனர். யுத்தத்தில் குதிரைகள் கிளப்பியதும், தேர்ச்சக்கரங்களால் மிகுந்ததும் யானைகள் தமது காதுகளை அடித்துக் கொள்வதனால் பரவியதுமான புழுதியானது, ஆடைபோலச் சூரியனை மறைத்தது. காற்று வசத்தினால் திறப்புற்ற முகங்களால் மிகுந்த சேனைப் புழுதியைக் கிரகிக்கும் 'மத்ஸ்யதுவஜங்கள்' நாலாபக்கமும் கலங்கின புதிய நீரைப் பருகும் நிஜமீன்கள்போல விளங்கின. புழுதி மிகுந்திருக்கையில், தேர், சக்கர வொலியால் அறியப்பட்டது; யானை அசைகின்ற மணியின் சப்தத்தினால் அறியப்பட்டது; வீரர்கள் தமது கக்ஷியைச் சேர்ந்தவர்களையும் பகைவரைச் சேர்ந்தவர்களையும் தத்தம் தலைவரின் பெயரை உச்சரிப்பதனால் அறிந்துகொண்டனர். கண் வழியை மறைத்துக்கொண்டு யுத்தத்தில் பரவின புழுதியென்னும் இருளுக்கு வாளால் வெட்டப்பட்ட குதிரை, யானை, வீரர் இவர்களிடமிருந்து உண்டான உதிரப்பிரவாகம், 'பாலசூரிய'னாக ஆகியது உதிரத்தினால் பூதலஸ்பரிசமற்று, மேலே காற்றினால் சுழற்றப்பட்ட புகையானது, தீ தணலாவதற்கு முன்பு எழும்பிய புகைபோல விளங்கியது.

தேரிலுள்ள வீரர்கள், அடிபட்ட மூர்ச்சை தெளிந்ததும் குதிரைகளைத் திருப்பிச் செல்லும் தேர்ப்பாகர்களைக் கடிந்துகொண்டனர். பின்பு அவர்கள் தம்மை அடித்தவர்களை முன்கண்ட கொடிகளைக்கொண்டு கண்டுபிடிக்க, கோபத்துடன் அடித்தனர். வில்லாளிகள் இழுத்துவிட்ட கணைகள், பாதிவழியில் பகைவர் கணைக

---

* நதம் = கிழக்கிலிருந்து மேற்கே பாயும் ஆறு.

ளால் முறிக்கப்பட்ட போதிலும், கூரிய முனையுள்ள முன்பாகங்கள், தமது வேகவசத்தினால் 'லக்ஷ்ய'த்தை அடைந்தன. 'கஜ' யுத்தத்தில் மாவுத்தர்களின் தலைகள் கூரிய சக்கராயுதத்தினால் அறுக்கப்பட்டன; ஆயினும் அத்தலைகளின் கேசம் பருந்துகளின் நகங்களில் மாட்டிக் கொண்டமையால் தாமதப்பட்டு விழுந்தன.

முதலில் அடித்த குதிரைப்பாகன் ஒருவன், திருப்பி யடிப்பதற்கு வல்லமையற்றுக் குதிரைமீது படுத்திருக்கும் பகைவனை மீண்டும் அடிக்க முடியவில்லை; ஆனால், அவன் மூர்ச்சை தெளிந்தெழுந்திருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தனன். உறையினின்றெடுக்கப்பட்ட கத்திகள், உடலைவிட விரும்பும் * 'கவசி'களின் பெரிய தந்தங்களில் உறைந்தமையால் தீப்பொறிகள் வருவதைக் கண்டு யானைகள் பயந்து, துதிக்கையிலுள்ள நீரால் அவற்றை அவித்தன. யுத்தக்களம், 'மிருத்யு'வின் † 'பானபூமி'யைப்போல, விளங்கிற்று. அதிக 'பாண'ங்களால் அறுக்கப்பட்ட தலைகளென்னும் பழங்கள் நிறைந்திருந்தன; தலைப்பாகைகளென்னும் பாத்திரங்களும் உதிரமெனும் மதுவின் பிரவாகமும் இருந்தன. ஓர் நரி, மாம்ஸத்தில் பிரியமுள்ளதா யிருந்தும், இருப்க்கங்களிலும் பறவைகளால் துண்டிக்கப்பட்ட ஓர் கையின் துண்டைப் பறவைகளிடமிருந்து கொண்டுவந்து புசிக்கையில், அக்கையிலுள்ள தோள்வளையின்முனை தொண்டையில் குத்தினமையால் அதை எறிந்துவிட்டது.

ஓர்வீரன் பகைவரது கத்தியினால் வெட்டப்பட்டதும் தேவனாகித் தேரில் ஏறிக்கொண்டு, போர்க்களத்தில் தனது ‡ கபந்தம் குதிப்பதைக்கண்டனன்; அப்பொழுது அவனது வலதுபக்கத்தில் தேவஸ்திரீ அமர்ந்திருந்தனள். மற்றிரு வீரர்கள் தத்தம் ஸாரதி இறந்துவிட்டமையால், தாமே ஸாரதிகளாகவும், யுத்தஞ் செய்பவர்களாகவும் ஆயினர்; பின்பு அவர்கள் தமது குதிரைகள் இறந்துவிட்டதனால் தேரிலிருந்து இறங்கி, § 'கதையி'னால் யுத்தஞ்செய்தனர்; ஆயுதம் முறிந்ததும் கைச்சண்டை செய்யலாயினர். பின்பு இருவரும் அடித்துக்கொண்டு ஒரே சமயத்தில் உயிரைவிட்டுத் தேவர்களாயினர்; அப்பொழுது இருவீரரும் ஒரே $ 'அப்ஸர'ஸ்திரீயை விரும்பினமையால், அவ்விடம் கலகம் ஏற்பட்டது.

* கவசிகள் = இரும்பு முதலியவற்றாலாகிய சட்டையை அணிந்தவர்கள். † பானபூமி = தண்ணீர்ப்பந்தல். ‡ கபந்தம் = தலையின்றிய உடல். § கதை = தண்டு; சுக்குமாந்தடி. $ அப்ஸரர் = தேவருலகத்துள்ள வேசிகள்.

அவ்விருசேனைகளும், பின்னும் முன்னும் எதிர்த்தடிக்கும் காற்றினால் பெருகின கடலலைகள்போல, ஒருவரிடமும் நிலையற்றதான வெற்றியையும் தோல்வியையும் அடைந்தன. மகா பலம் பொருந்திய அஜன் தனது சேனையைப் பகைவர் அழித்தபோதிலும், சத்துருசேனையை எதிர்த்தனன்; காற்றினால் புகை தூரத்தள்ளப்பட்டபோதிலும், * திரண மிருக்குமிடத்திலேயே பிரவேசிக்கின்றது. தேரிலிருப்பவனும், அம்பறாத்தூணியை யுடையவனும், கவசமுள்ளவனும், வில்லையுடையவனும், போரில் விருப்பமுள்ள சுத்தவீரனுமான அஜன், 'பிரளயகால'த்தில் † 'மகாவராக' ரூபியான 'மாதவன்' கரை புரண்டுவரும் கடல்நீரைத் தகைவதுபோல, பகைவரைத் தகைந்தான். பிறகு அஜன் யுத்தத்தில் இடதுகையை அம்பறாத்தூணியில் மனோகரமாகச் செலுத்துவதுபோலக் காணப்பட்டான். உடனே செவிவரையில் இழுக்கப்பட்ட அவனது நாண்கயிறே பகைவரையழிக்கும் பாணங்களை உண்டாக்கியது போலிருந்தது.

அவ்வஜன் 'பல்ல' மென்னும் ஆயுதத்தினால் பகைவரது கழுத்தை வெட்டி, அன்னோர் தலைகளால் பூமியை மறைத்தனன்; அத்தலைகளிலுள்ள அதரங்கள் கோபத்துடன் கடிக்கப்பட்டமையால் மிகவும் சிவந்திருந்தன; அன்றியும் அத்தலைகள் பிரகாசமான ரேகையுடன் புருவங்களை நெறித்துக்கொண்டும் ஹுங்காரஞ் செய்துகொண்டும் இருந்தன. அரசர்கள் யாவரும் போர்க்களத்தில் யானை முதலிய சகலச் சேனைகளோடும் கவசத்தைப்பிளக்கும் ஆயுதங்களாலும் தமது முழுமுயற்சியோடும் 'அஜ'னை எதிர்த்தனர். பகைவருடைய அஸ்திரங்களால மறைந்த தேரில் வீற்றிருக்கும் அஜராஜன், பனியால்மறைந்த காலை வேளை, சொற்பப்பிரகாசமுள்ள சூரியனால் விளங்குவதுபோல, கொடியின் நுனியினால் மாத்திரம் கண்டுபிடிக்கத் தக்கவனாயிருந்தனன். மகாராஜன் புத்திரனும் 'மகரத்துவஜன்'போல் அழகுள்ளவனும், உறக்கத்தில பற்றற்றவனுமான அஜன் ‡ 'பிரியம் வத'னிடமிருந்து கிடைத்ததும், 'கந்தருவ'னைத் தேவதையாகவுடையதுமான "பிரஸ்வாபனம்" என்னும் அஸ்திரத்தைப் பகைவரிடம் பிரயோகஞ் செய்தான். பின்னர் வில்லை இழுத்து விடுவதில் முயற்சியற்ற கைகளையும் தோளில் நழுவிய தலைப்பாகைகளையும் 'துவஜஸ்தம்ப'ங்களில் சாய்ந்த சரீரங்களையும் பெற்றுள்ள பகைவர்சேனை நித்திரையின் வசமாகியது.

---

* திரணம் = புல். † மகாவராகம் = ஆதிவராக மென்னும் பன்றி.
‡ பிரியம்வதன் = ஓர் கந்தருவன்.

பிறகு அஜகுமாரன், 'இந்துமதி'யினால் அறியப்பட்ட சுவையையுடைய அதரங்களில் சங்கைவைத்து ஊதினான்; அப்பொழுது சுத்தவீரனான அஜன், தனதுகையினால் சம்பாதித்ததும் உருவெடுத்ததுமான கீர்த்தியை அச்சங்கால் குடிப்பவன்போல விளங்கினான். முன்பு மறைந்திருந்த அஜனின் போர்வீரர்கள், சங்கத்துவனியின் அடையாளத்தைக்கொண்டு திரும்பிவந்து, பகைவரைத் தூங்கச்செய்த அஜனைக் கண்டனர்; அப்பொழுது அவன், குவிந்த தாமரைமலரினிடையில் பிரதிபித்த சந்திரனைப் போலிருந்தான்.

பின்பு அஜன் "ஹே அரசர்களே! இப்பொழுது 'இரகு' புத்திரன் உங்களுடைய கீர்த்தியைமட்டும் அபஹரித்தான்; அருளால் உயிரை அபஹரிக்கவில்லை" என்னும் வாக்கியத்தைப் பகைவர் கொடிகளில் உதிரத்தில் நனைந்திருக்கும் கணைகளின் நுனியால் எழுதும்படி செய்தான். பிறகு அஜன் வில்லின் முனையில் கையை ஊன்றிக் கொண்டவனாய், நெற்றியில் வேர்வைத் துளிகள் சிந்துகையில் பயமடைந்த இந்துமதியிடஞ்சென்று "ஹே ராஜகுமாரீ! என்னிடம் அநுமதிபெற்ற நீ இப்பொழுது பகைவர், குழந்தைகளாலும் பிடுங்கக்கூடிய அஸ்திரங்களையுடையவர்களாயிருப்பதைப் பார்! அப்பகைவர் இத்தகைய சௌரியத்தினால் என் கையிலிருக்கும் உன்னை அபகரிக்க முயற்சித்தனர்" என்று கூறினான். அவன் தலைப்பாகையை எடுத்தமையால் அவனது சிகை அவிழ்ந்திருந்தது. பகைவராலேற்பட்ட துக்கத்திலிருந்து விடுபட்ட இந்துமதியின் முகம், மூச்சுக்காற்றினாலேற்பட்ட அழுக்கு நீங்கி நிர்மலமான கண்ணாடியைப்போல, விளங்கியது. 'இந்துமதி' கணவனது சௌரியத்தைக் கண்டு சந்தோஷமடைந்திருந்தும், 'அஜ'னைத் தானே துதிக்கவில்லை; அதனால் புதிய நீர்த்துளிகளால் நனைந்தபூமி, மயில்களின் "கே" "கா" சப்தத்தினால் மேகக்கூட்டத்தைத் துதிப்பது போல, தோழிமார்களின் வார்த்தைகளால் அஜனைத் துதித்தனள்.

இவ்வாறு அஜன், குற்றமற்றவனாய், பகைவர்களின் தலையில் வலது காலை வைத்துவிட்டு, குற்றமற்ற இந்துமதியை அழைத்துச் சென்றனன்; தேர்களும் குதிரைகளும் செல்வதனாலுண்டான புழுதி இந்துமதியின் முன்னெற்றி மயிர்களில் படிந்து மலினப்படுத்தியது; அப்பொழுது 'இந்துமதி' உருவெடுத்துவந்த 'ஜயலக்ஷ்மி' போலிருந்தாள். 'இரகு'வானவர் முன்னமேயே அஜன் அரசர்களை எதிர்த்து வெற்றிபெற்றதைத் தெரிந்துகொண்டு, அஜன் வெற்றியோடும் சிறந்த மனைவியோடும் திரும்பிவந்து வணங்கியதும் அவனை ஆசீர்

வதித்து அவனிடம் குடும்பபாரத்தை ஒப்புவித்தனன்; பின்பு இரகு மோக்ஷ மார்க்கத்தில் உற்சாகமுள்ளவனாயினன். சூரியவமிசத்து மன்னவர்கள், ராஜ்யபாரத்தை வகிப்பதற்குரிய புதல்வன் இளவரசான பிறகு கிருகஸ்தாசிரமத்தில் இருப்பதில்லையன்றோ?

(ஏழாவது ஸர்க்கம் முடிந்தது.)

(இன்னும் வரும்.)

By: M. M. Narayanasawmy Aiyer,
Mudikondan, P. O.
(via) Nannilam.

ஸ்ரீஜிநாய நம:

ப்ரஶ்நோத்தர மாணிக்யமாலா

ப்ரஸ்னோத்தர மாணிக்யமாலா.

210456

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6, சஞ்சிகை-11, பக்கம்-242.)

2-வது அத்தியாயம்.

1. ஸப்தவ்யஸநாநிகாநி?

சப்தவ்யசனங்க ளேவை?

த்யூதமாம்ஸஸுராவேஶ்யா வேடசௌர்ய பராங்கநா:
மஹாபாபாநி ஸப்தைவவ்யஸநாநித்ய ஜேத்புத:

த்யூதமாம்சசுராவேச்யா கேடசௌர்ய பராங்கநாஹா
மகாபாபாநி சப்த்தைவவ்யசநாநித்ய ஜெத்புதஹ.

(இ-ள்.) சூதாட்டம், மாம்சம் தின்னல், கள்சாராயம் குடித்தல், வேச்யாகமனம் வைத்தல், வேட்டையாடுவது, திருடுதல், பரஸ்திரீகமனம் வைத்தல், முதலானவைகள் பெரிய பாபமென்று சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஏழு வ்யசனங்களை புத்திமந்தர்கள் விட்டுவிடவேண்டும்.

2. வ்யஸநை: கே கே நஷ்டா:

ஏழுவ்யசனங்களினாலே நாசமடைந்தவர்கள் யார்?

த்யூதாத்தர்மஸுத: பலாதிகபகோமத்யாத்ய தோர்நந்தநா:
சாருஹ காமுகயாம்ருகாந்தகதயாஸப்ரம்மதத்தோந்ருப:
சௌர்யத்வாச்சிவபூதிரந்யவநிதா தோஷாத்தஶாஸ்யோஹத:
ஏகைகவ்யஸநாஹதா இதிஜநா: ஸர்வைர்நகோ நஶ்யதி

த்யூதாத்தர்மசுதாபலாதிகபகோமத்யாத்ய தோர்நந்தநாஹ
சாருஹ காமுகயாம்ருகாந்தக தயாசப்ரம்மதத்தோந்ரபஹ

சௌர்யத்வாச்சிவபூதிரச்ய வனிதா தோஷாக்த சாச்யோஹதஹ
ஏகைக வ்யசனாத்ததா இதிஜநாஹா சர்வைர்நஷ்டோ நச்யதி.

(இ-ள்.) சூதாட்டத்தினாலே பாண்டவர்களும், மாம்சபக்ஷணத்தினாலே பகராஜனும், கள்சாராயத்தினால் யாதவர்களும், வேச்யாகமனத்தினாலே சாருதத்தனும், வேட்டையினாலே ப்ரம்ஹதத்தராஜனும், களவினாலே சிவபூதி என்கிற ப்ராமணனும், பரஸ்திரீ ஹரணத்தினால் ராவணனுமாக இப்படி ஒவ்வொரு வ்யசனத்தினின்றும், இவர்கள் யாவரும் நாசத்தை யடைந்தார்கள். ஆதலின், ஏழு வ்யசனத்தோடே கூடியவன் எவன்தான் நாசமடையான்!

சூது.

3. 𑌦𑍍𑌯𑍂𑌤𑌸𑍍𑌯 𑌫𑌲𑌂 𑌕𑌿𑌂 ?
சூதாட்டத்தினுடைய பலம் என்ன ?

𑌧𑌨𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑍀𑌨𑌾𑌶𑍍𑌚 𑌭𑌾𑌗𑍍𑌯𑌹𑍀𑌨𑌾𑌃 𑌕𑍁𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃
𑌦𑍍𑌯𑍂𑌤𑌕𑌾𑌰𑌾 𑌨𑌰𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌦𑍃𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌧𑌰𑍍𑌮𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃
தனவஸ்த்ர விகீநாச்ச பாக்யஹீனாகு புத்தயஹ
த்யூதகாரா நராஹ சர்வேத்ருச்யந் தேதர்மவர்ஜிதாஹா.

(இ-ள்.) சூதாடுகிறவர்கள் யாவரும் தனஹீனராயும், வஸ்திரஹீனராயும், பாக்ய ஹீனர்களாயும், துஷ்டபுத்தி யுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். இன்னும்,

4. 𑌦𑍍𑌯𑍂𑌤𑌾𑌦𑍍𑌦𑌶 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌰𑍀𑌃 𑌸𑍁𑌮𑌤𑌿𑌃 𑌸𑍁𑌖𑌂
𑌸𑌤𑍍𑌯𑌂𑌶𑍌𑌚𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌚𑌶𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌸𑌦𑍍𑌗𑌤𑍀
த்யூதாத்தசவிநச்யந்தி தர்பஸ்ரீ: சுமதி: சுகம்.
சத்யம்சௌசம் ப்ரதிஷ்டாசசிஷ்ட்யம் விஸ்வாசசத்கதீ.

(இ-ள்.) தர்ம, லட்சுமி, புத்தி, சுக, சதய, பவித்ரதை, கௌரவம், சௌஜன்யம், விஸ்வாசம், சத்கதி, ஆகியவைகள் சூதாடுபவர்களிடத்தில் காணாமல் நாசமடைகின்றன. இன்னும்,

5. 𑌦𑍍𑌯𑍂𑌤𑌸𑍍𑌯 𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌃 𑌕𑍇 ?
சூதாட்டத்தினுடைய பந்துக்கள் யார் ?

𑌵𑌿𑌷𑌾𑌦𑌃 𑌕𑌲𑌹𑍋 𑌬𑌨𑍍𑌧𑌃 𑌕𑍋𑌪𑍋 𑌮𑌾𑌨𑌃 𑌶𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑍍𑌰𑌮𑌃
𑌪𑍈𑌶𑍁𑌨𑍍𑌯𑌂 𑌮𑌤𑍍𑌸𑌰𑌃 𑌶𑍋𑌕𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌦𑍍𑌯𑍂𑌤𑌸𑍍𑌯 𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌃
விஷாதஹ க்லகோபந்தஹ கோபோமானஹ ஸ்ரீயோப்ரமஹ
பைசுன்யம் மத்சரஹ சோகஹ சர்வேத்யூதச்ய பாந்தவாஹா.

(இ-ள்.) மனக்குழப்பம், கலகம், கர்மபந்தம், அதவாஜெயில்கானா, கோபம், கர்வம், ச்ரமம், ப்ரமை, துர்ஜனத்வம், மாத்சர்யம், சோகம் முதலானவைகள் சூதாட்டத்தினுடைய பந்துக்கள். இன்னும்,

6. 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌸𑌤𑍍𑌯𑌂𑌚 𑌚𑍌𑌰𑍇𑌽𑌪𑌿𑌨 𑌶𑍌𑌚𑌂 𑌵𑍃𑌷𑌲𑍀𑌪𑌤𑍌
𑌮𑌦𑍍𑌯𑌪𑍇 𑌸𑍌𑌹𑍃𑌦𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌦𑍍𑌯𑍂𑌤𑍇𑌚 𑌤𑍍𑌰𑌿𑌤𑌯𑌂 𑌨𑌹𑌿

நாஸ்திசத்யம்ச சௌரேபிந சௌசம் வ்ருஷலீபதௌ
மத்யபே சௌக்ரதம் நாஸ்தித்யூதேசத்ரிதயம் நஹி.

(இ-ள்.) கள்ளனிடத்தில் சத்யமிருப்பதில்லை; காமிபுருஷனிடத்தில் நிர்மலத்வ மிருப்பதில்லை; குடிகாரனிடத்தில் ஸ்நேகம் இருப்பதில்லை; இன்னும் சூதாடுகிறவனிடத்தில் இந்த மூன்று மிருப்பதில்லை.

𑌮𑌾𑌂𑌸

7. 𑌮𑌾𑌂𑌸𑌂 𑌨𑌜𑌾𑌯𑌤𑍇 𑌭𑍂𑌮𑍍𑌯𑌾𑌂 𑌨𑌵𑍃𑌕𑍍𑌷𑍇𑌨𑌚 𑌪𑌰𑍍𑌵𑌤𑍇
𑌜𑍀𑌵𑌘𑌾𑌤𑌸𑌮𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌂 𑌹𑍇𑌯𑌂 𑌮𑌾𑌂𑌸𑌂 𑌵𑍍𑌰𑌤𑌾𑌦𑌿𑌭𑌿𑌃

மாம்சம் நஜாயதேபூம்யாம் நவ்ருக்ஷேநச பர்வதே
ஜீவகாத சமுத்பன்னம் ஹேயம் மாம்சம் வ்ரதாதிபிஹ.

(இ-ள்.) மாம்சம் பூமியிலும், வ்ருக்ஷங்களிலும், பர்வதங்களிலும் உண்டாவதில்லை. அது ப்ராணிகளைக் கொல்லுவதினாலே ப்ராப்தமாகிறது. ஆகையினாலே மாம்சத்தை வ்ரதீகர்கள் விட்டுவிடவேண்டும்.

8. 𑌶𑍁𑌕𑍍𑌰𑌶𑍋𑌣𑌿𑌤 𑌸𑌂𑌭𑍂𑌤𑌂 𑌤𑍍𑌰𑌸𑌾𑌙𑍍𑌗𑌿𑌸𑌙𑍍𑌕𑍁𑌲𑌂 𑌪𑌲𑌂
𑌤𑌦𑍍𑌭𑍋𑌜𑍀 𑌨𑌰𑌕𑌂 𑌯𑌾𑌤𑌿𑌯𑌾𑌵𑌚𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑍌

சுக்ரச்ரோணித சம்பூதம் த்ரசாங்கிசங்குலம் பலம்
தத்போஜி நரகம் யாதியாவச்சந் த்ராதிவாகரௌ.

(இள்.) சுக்ர இன்னும், ரக்த இவைகளினின்றும் உண்டாகிற மாம்சமானது த்ரசஜீவன்களினாலே நிறைந்திருக்கிறது. அதைத் தின்பவர்கள் சூர்யசந்திரர்கள் இருக்கும் வரையில் நரகத்தில் துக்கத்தை அனுபவிப்பார்கள். ஆகையினாலே மாம்சத்தை விட்டுவிடவேண்டும்.

𑌮𑌦𑍍𑌯

9. 𑌨𑌰𑍋𑌤𑍍𑌤𑌿𑌮𑌦𑍍𑌯𑌪𑌾𑌨𑌤𑌃 𑌸𑍍𑌮𑌰𑍇𑌣𑌵𑌿𑌹𑍍𑌵𑌲𑍀𑌕𑍃𑌤𑌃
𑌸𑍍𑌵𑌮𑌾𑌤𑌰𑌂 𑌸𑍍𑌵𑌯𑍋𑌷𑌿𑌤𑌾 𑌸𑌮𑌾𑌨𑌮𑍇𑌵 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇
𑌵𑌿𑌵𑍇𑌕𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌹𑍀𑌨𑌤𑌃 𑌕𑌰𑍋𑌤𑌿𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌂 𑌵𑌧𑌂
𑌤𑌤𑍋𑌵𑌿𑌵𑍇𑌕𑌿𑌭𑌿𑌰𑍍𑌜𑌨𑍈𑌸𑍍𑌸𑍁𑌰𑌾 𑌨𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤𑍇𑌸𑌦𑌾

நவேத்திமத்யபானதஹ ஸ்மரேண விக்வலீக்ருதஹ
ஸ்வமாதரம் ஸ்வயோஷிதா சமானமேவ மன்யதே
விவேகபுத்திஹீநதஹ கரோதிதேகினும் வதம்,
ததோ விவேகிபிர்ஜ நைச்சுரா நிஷித்யதேசதா.

(இ-ள்.) மனிதன் கட்குடியினின்றும் மதோன்மத்தனாய் காமபீடிதனாய்த்தாயையே பெண்சாதியாக எண்ணுகிறான். அவனுடைய விவேகம், புத்தி,

ஹீநத்தினின்றும் ப்ராணிகளைக் கொல்லுகிறான். அக்காரணத்தினாலே புத்தி வந்தர்களான ஜனங்களினாலே கட்குடியானது நிஷித்தமென்று அடிக்கடி சொல்லப்படுகிறது.

10. वैरूप्यं व्याधिपीडा स्वजनपरिभवः कार्यकाला
[तिपातो
विद्वेषो ज्ञाननाशः स्मृतिमतिहरणं विप्रयो
[गश्च सद्भिः
पारुष्यं नीचसेवा कुलबलविलयो धर्मकामार्थ
[हानिः
कष्टं भोः षोडशैते निरुपचयकरा मद्यपानस्य
[दोषाः

வைரூப்யம் வ்யாதிபீடா ஸ்வஜன பரிபவஹ கார்யகாலாதி
[பாதோ
வித்வெஷோ ஞானநாசஹ ஸ்ம்ருதி த்ரிஹரணம் விப்ரயோ
[கச்சசத்பிஹ
பாருஷ்பம் நீசசேவாகுல கிரிசலனம் தர்மகாமார்த்தஹாநிஹ
கஷ்டம்போ சோடசைதே நிருபசயகார மத்யபானச்ய தோ
[ஷாஹா.

(இ-ள்.) மத்யபானத்தினின்றும் மனுஷ்யனானவன், குரூபியாயும், ரோகியாயுமாகித் தன்னுடைய ஸ்வஜனத்தினின்றும் அவமானத்தை யடைகிறான். இன்னும் அவன் வீணாகக்காலத்தைக் கழிக்கிறான். எல்லோர்களினாலும் த்வேஷிக்கப்படுகிறான். அவனுடைய ஞானமும் நஷ்டமடைகிறது. இன்னும் மதுபானம் ஞானசக்தியும் தைர்யமும் இல்லாமல் செய்கிறது. சத்புருஷர்கள், மதுபானியினுடைய சகவாசத்தை விடுகின்றனர். மதுபானிகள் கடோர்களாகின்றனர்; நீசர்களை சேவிக்கின்றனர்; குலப்ராஷ்டராகின்றனர்; தர்ம, அர்த்த, காம, மென்கிற புருஷார்த்தங்களுக்கு ஹானியை உண்டுபண்ணுகின்றனர். இந்தப்ரகாரம் கள்குடியினின்றும் பதினாறு தோஷங்களுக்கு மனுஷ்யர் உள்ளாகின்றனர். ஆகையினாலே கள்குடியை விட்டுவிடுங்கள்.

(இன்னும் வரும்)

விருதூர். திரு. அப்பாண்டை நயினார்.
அனந்தபுரம் ஸ்கூல் டீச்சர்,
ஜாகீர் ஆரணி.

குறிப்பு:—முன்னொருமுறை கட்குடியின் இழிவைப்பற்றிய ஒரு வியாசம், நம் சீலனில் வெளியானதற்கு, 'இதையா ஜைனப்பத்திரிகையாகிய தருமசீலனில் வெளியிடுகிறது' என்று சில விசேஷ புத்திமான்கள் குறைகூறியதாகக் கேள்விப்பட்டோம்; இப்போது சாஸ்திர சம்மதமாக இதில் அக்குடியின் விஷயம் வருவதற்கு என்ன சொல்வார்களோ தெரியவில்லை. பத்திராதிபர்.

ஸ்ரீ ஜைன ஸித்தாந்த ப்ரவேசிகா.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6, சஞ்சிகை-11, பக்கம்-243.)

28. ப்ர:—ஸ்ம்ருதியென்றாலென்ன?

உத்:—முதல் அனுபவித்த பதார்த்தங்களை ஞாபகம் செய்து கொள்வதற்கு ஸ்ம்ருதி என்பார்கள்.

29. ப்ர:—ப்ரத்யபிஞானமென்று எதற்குப்பெயர்?

உத்:—ஸ்ம்ருதி, இன்னும் ப்ரத்யக்ஷம் இவைகளுக்கு விஷயமாய் இருக்கக்கூடிய பதார்த்தத்தில் இருக்கக்கூடிய உபயாத்ம ஞானத்திற்கு, ப்ரத்யபிஞான மென்பார்கள். உதாஹரணம்: "முன் எவனைப் பார்த்தேனோ, அவனே இந்த மனுஷ்யன்" என்பதாம்.

30. ப்ர:—ப்ரத்யபி ஞானத்தில் எத்தனை விதம்?

உத்:—ஏகத்வ ப்ரத்யபிஞானம் சாத்ருச்ய ப்ரத்யபிஞானம் முதலான அநேக பேதங்களுண்டு.

31. ப்ர:—ஏகத்வ ப்ரத்யபிஞான மென்றாலென்ன?

உத்:—ஸ்ம்ருதி இன்னும் ப்ரத்யக்ஷம் இவைகளுக்கு விஷயமாய் இருக்கக்கூடிய பதார்த்தத்தில், ஐக்யத்தைக் காண்பிக்கிற உபயாத்மஞானத்திற்கு ஏகத்வ ப்ரத்யபிஞானமென்பார்கள். உதாஹரணம்: "எவன் நேற்றுப் பார்க்கப்பட்டானோ அவன் இதே மனுஷ்யன்" என்பதாம்.

32. ப்ர:—சாத்ருச்ய ப்ரத்யபிஞானத்தினுடைய லட்சணமென்ன?

உத்:—ஸ்ம்ருதி இன்னும், ப்ரத்யக்ஷம் இவைகளுக்கு விஷயமாயிருக்கிற பதார்த்தத்தில சமத்வத்தைத் தெரிவிக்கிற உபயாத்ம ஞானத்திற்கு சாத்ருச்ய ப்ரத்யபிஞான மென்பார்கள்.

33. ப்ர:—தர்க்கமென்று எதற்குப் பெயர்?

உத்:—வ்யாப்தி ஞானத்திற்கு தர்க்கமென்பார்கள்.

34. ப்ர:—வ்யாப்தி என்றாலென்ன?

உத்:—அவினாபாவி சம்பந்தத்திற்கு வ்யாப்தி என்பார்கள்.

35. ப்ர:—அவினாபாவி சம்பந்தமென்றாலென்ன?

உத்:—எங்கெங்கே சாதன (ஹேது) இருக்கிறதோ, அங்கங்கே, சாத்யம் நிச்சயமாய் இருக்கிறது. எங்கெங்கே சாத்ய மிருப்பதில்லையோ அங்கங்கே சாதனங்களில்லாம லிருக்கின்றன. அவை அவினா பாவிசம்பந்தமென்று சொல்லப்படுகின்றன. உதாஹரணம்: "புகை இருக்குமிடத்திலெல்லாம் அக்னி இருக்கிறது; இன்னும் அக்கினி இல்லாத இடத்தில் புகை இருப்பதில்லை. இந்த ப்ரகாரத்தினுடைய சம்பந்தத்திற்கு அவ்யாப்தி என்பார்கள்.

36. ப்ர:—சாதனமென்றாலென்ன?

உத்:—எது சாத்யமில்லாம லிருப்பதற்கு சமர்த்தமாவதில்லையோ அதே சாதனம். உதாஹரணம்: "அக்னிக்கு சாதனம் (ஹேது) புகை; எப்படி என்றால் புகை இல்லாமல் அக்னி இருக்க மாட்டாது.

(இன்னும் வரும்.)

விருதூர். திரு. அப்பாண்டை நயினார்
அனந்தபுரம் ஸ்கூல் டீச்சர்,
ஜாகீர், ஆரணி.

சிக்ஷணை.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-11, பக்கம் 228)

நாம் எந்த விதத்திலும் வயப்பரிணதியில் உத்கர்ஷத்தையும் சௌக்யத்தையும் அடைய வேண்டுமோ அதற்குத்தக்க சாதனத்தை பூர்வவயதில், சம்பாதித்துக் கொண்டு மேலும் மேலும் சுகபாகிகளாக இசசிப்பது நம்முடைய அவ்ச்யகர்த்தவ்யமாய் இருக்கிறது. இந்த விஷயத்தில் நம்புத்திக்கு விசேஷமாய் புகட்டக்கூடிய ஒரு ஸ்லோகத்தை எடுத்து எழுதுகிறேன். அதாவது,

"பூர்வே வயஸி தத்குர்யாத் யேந வ்ருத்த: ஸுகம் வஸேத்
யாவஜ்ஜீவேந தத்குர்யாத் யேநாமுத்ர ஸுகம் வஸேத்."

வ்ருத்தாப்யத்தில் சுகமடைய இச்சிக்கிறவன், தான் இச்சித்த சௌக்யத்தினுடைய சம்பாதனைக்குக் காரண கர்மாவை, பூர்வவயசில் அதாவது சிறுவயதில் செய்யவேண்டியது. இன்னும் தாருண்யத்தில் செய்ய வேண்டியது வித்யாப்யாசம், அர்த்தார்ஜனை முதலானது

வைகள். பாரலௌகிக சௌக்யத்தை அடைய இச்சிப்பவர்கள், ஜீவாத்மனுக்கு இந்த சம்பந்தமாய் இருக்கிறவரைக்கும் அப்பேர்ப்பட்ட பரலோக சுகத்துக்குக் காரணமான கர்மாவைச் செய்யவேண்டும் என்பது மேல் ஸ்லோகத்தின் கருத்து. நம்முடைய சமாஜத்தார். வித்தையைக் கற்காதபக்ஷத்தில் நாம் உத்கர்ஷத்தினுடைய லட்சணம் தோன்றாமல் தேசகால ஸ்திக்னு குணமாகக் கூடிய சகாய சம்பத்தை அடைந்து உத்க்ரஷ்ட நிலையிலிருக்கிற அன்ய சமாஜத்திற்குத் தலைகுனிந்து, அதினாலேயே காலக்ஷேபத்தைச் செய்ய வேண்டியதாய் இருக்கிறது. பூர்வ காலத்தில் நம் சமாஜத்திற்கு இருந்த உன்னதியை நினைத்தால், தற்சமயத்தில் உத்கர்ஷயத்தை அடைந்தும், அடைவதற்கு ப்ரயத்னம் செய்தும் வருபவர்களைப் பார்த்தும் சும்மா உட்கார்ந்திருப்பது அன்யாயமாயிருக்கிறது. சமாஜோத்கர்ஷமானது வித்யா ப்ரசாரமில்லாமல் வேறெந்தக் காரணத்தினாலும் உண்டாகமாட்டாது.

(இன்னும் வரும்.)

விருதூர். திரு. அப்பாண்டை நயினார்,
அனந்தபுரம் ஸ்கூல்டீச்சர்,
ஜாகீர், ஆரணி.

ஸ்ரீ விருஷபஸ்வாமி குறவஞ்சி.

1. தேவாதிதேவர் போற்றும் தீர்த்தன் விருஷபநாதர்
தாவாத இன்பந்தனை தானடைந்த சரிதைதனை
2. அசைவில் மனதுடனே அனுதினமும் சிந்தித்து
இசையுடனமைத்த குறவஞ்சிதனைப் பாடிடுவோம்
3. பஞ்சானுத்தரந்தனில் சர்வார்த்த சித்தியிலே
பஞ்சேந்திரியத்தை வென்ற பரமனவன்
4. இந்திர சுகமனுபவித்து பின்னரயோத்திநகர்
அந்தமுடனரசாளும் நாபிமஹாராஜனுக்கு
5. வாய்த்த மனைவியவள் மாது மருதேவி
தாய்தன் மனமகிழ ஷோடஸ சொப்பனங்கள்
6. கண்டபின்னரவள்வயிற்றில் ஜேஷ்ட நவமிதனில்
புண்டரீக மீதூர்ந்தோன் உத்திராட நக்ஷத்திரம்
7. காசியப கோத்திரத்தில் இக்ஷ்வாகு வம்ஸத்தில்
ஈசனவதரித்தார் இறைவர் மனங்களிக்க
8. சித்திரை மாதத்தில் கிருஷ்ணபக்ஷம் நவமிதனில்
உத்திராட நக்ஷத்திரம் வாய்ந்த திருநாள்தனிலே

9.	கர்ப்பாவதாரணம் செய்தார்	பொன்னிற மேனியுடன்
	தர்மோபதேசம் செய்தோன்	உயரம் வில்லைந்நூறு
10.	எண்பத்து நான்குலக்ஷம்	பூர்மவர்வயது
	பண்புடனே ஷட்கர்ம	தொழில்களனைவற்றும்
11.	வருணாசிரமத்தையும்	இன்னும் பலவற்றை
	கருணாநிதி தானும்	தருமோபதேசம் செய்து
12.	கன்னிதனை மணந்து	புத்திர சந்தானமெய்தி
	உன்னிதமாயின்பந்தனை	ஒருங்கே யனுபவித்து
13.	எண்ணுமெழுத்ததனை	பிராம்மிக்கும் சுந்தரிக்கும்
	எண்ணில் கலைகளையும்	புண்ணிய புத்திரற்கும்
14.	தர்மோபதேசம் செய்து	தாரணியை ஒருகுடைக்கீழ்
	கர்மக்ஷயஞ் செய்தோன்	அறுபத்து மூன்றுலக்ஷம்
15.	பூர்வமரசாண்டு	பூலோகந்தான் செழிக்க
	சீர்பெருகு மன்னனும்பின்	துறக்க மனமுமெய்தி
16.	சித்திரை மாதத்தில்	கிருஷ்ணபக்ஷம் நவமியிலே
	உத்திராட நக்ஷத்திரம்	பொருந்துமந்த நாள்தனிலே
17.	சித்தார்த்த வனந்தனிலே	தீக்ஷையவர் கைக்கொண்டார்
	சித்திரை மாதந்தனில்	கிருஷ்ணபக்ஷம்தசமியன்று
18.	உத்திராடந்தனிலேயவர்	சகடமுக்கிய வனந்தனிலே
	எத்திக்கும் போற்றிடவே	இந்திரரும் வந்திறைஞ்ச
19.	கேவலஞ்ஞானந்தனை	வடவிருக்ஷந் தன்னடியில்
	பாவலர் போற்றுகின்ற	பரமனவர் அடைந்தார்
20.	மாகமாதம் கிருஷ்ணபக்ஷம்	சதுர்த்தசி உத்திராடந்தனில்
	மோகங்களை வென்றோன்	கைலாசகிரிதனிலே
21.	முத்திதனையடைந்தான்	முதல்வன் விருஷபநாதன்
	எத்திசையிலுள்ளவரும்	இந்திரரும் வந்திறைஞ்சி
22.	பன்னிரண்டு யோஜனையில்	பொன்னெயில் தனையமைத்தார்
	பன்னிருகணங்களுக்கும்	பரமனுபதேசித்து
23.	சித்தருலகடைந்தார்	விருஷபமவர் சின்னம்
	பத்தியுடன் பணிந்தவரை	கோமுகயக்ஷனையும்
24.	சக்கிரேஸ்வரியக்ஷியையும்	பணிந்து ஜீவகதாசன்
	பக்தியாயுரைத்தகுற	வஞ்சிதனைப் பாடுவோம்.

முற்றுப்பெற்றது.

(சிக்கில் A. ஜீவேந்திரன்.)

கீர்த்தனைகள்.

1. (பூர்ணசந்திரிகா; ஆதிதாளம்.)

பல்லவி.

பரமேஷ்டியே உனைப்பணிந்தேனே
பக்தனல்லவோ பார்த்து ரக்ஷிப்பாய் (பர)

அனுபல்லவி.

அருகா உனையே அடிபணிந்தோர்க்கு
இருவினையற அருள்செய்வாய் நீயே (பர)

சரணம்.

சர்வ அ அவி இஇயா அஅ அபி இஇ (சர்வவியாபி)
சர்வேஸ்வரா சமயமிதுதான்
கர்மாகிதா சர்வஞ்ஞனே
வர்மமுனக்கேன் தர்மமலல பாராய் (பர)

2. (கௌரிமனோஹரி; ஆதிதாளம்.)

பல்லவி.

மரைமலர் மேலமர் மலவிநாதா (மரை)

அனுபல்லவி.

அவம் செய்யுமென்னை யாதரிப்பாய் தேவே
தவம் புரிந்திட தயவு செய்தருள்வாய் (மரை)

சரணம்.

விண்ணோர் போற்றுகின்ற அண்ணலருகையா
பண்மலரார்ச்சித்தேன் பாதுகாப்பா யென்னை
பாலன் சிவகதாசன் பணிந்தேனே
ஞாலம்புகழ்சீலா காலபாசம் தீர்ப்பாய் (மரை)

3. (அடாணா; ஆதிதாளம்)

பல்லவி.

வாது செய்வது மழகோ?

அனுபல்லவி.

வாதுகள் செய்தாலுன்றன்னை பாதம் பணிந்தேற்றிட
சாதக மேதுரைப்பாய் வேதபாரீச நாதா (வாது)

சரணம்.

சொல்லா வேதந்தனையே எல்லோர்க் குரைத்தருளி
நல்லாருளந்தனிலே அல்லும் பகலுறைவாய் (வாது)
பொல்லாவினைகளை நீ எல்லாம் அறக்கடிந்து
சொல்லால் விளக்கரிய ஒல்லும் பதமருள்வாய் (வாது)

4. (சாவேரி-ஆதிதாளம்.)

பல்லவி.

யாருடன்சொல்வே னவர்பெருமை

அனுபல்லவி.

பார்புகழ் பரந்தாமன் பாதம்பணிந்தோர்கள்
பாவபந்தங்கள் போக்கிப் பரமபதமடைவார் (யாருடன்)

சரணம்.

இருவினை யேகநானும் பெருமானடிபணிந்தேன்
அருமறை நாயகனை இருடிகளும் காணார் (யாருடன்)
காலனை வென்றவீரன் காமன் கடிந்ததிரன்
பாலன் ஜீவகதாசன் நேமமுடன் தொழுதேன் (யாரு)

5. (மோஹனம்—ஆதிதாளம்.)

பல்லவி.

அருமறை நாதனடி என்னகத்தினில் கண்டேனே.

அனுபல்லவி.

திருமருமார்பனடி தேவர்கள் காணுவடி (அருமறை)

சரணம்.

பிண்டிக்கீழமர்ந்தோனடி தொண்டர்கள் கொண்டாடுமடி
அண்டினோர்க்கருளுமடி எண்டிசையும் போற்றுமடி (அரு)
ஊழ்வினை யறுக்குமடி பாழிருளகற்றுமடி
வாழ்வினைப் பயக்குமடி ஏழைக்குமருளுமடி (அரு)
காலனைக் கடிந்தவடி கோலமுக்குடையோனடி
சீலர்களைக் காக்குமடி ஞாலம்புகழ் வீரனடி (அரு)

(முற்றும்).

கிக்கில் அ. ஜீவேந்திரன்.

செய்யுட் கதைகள்.

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-11, பக்கம்-246)

நான்முகன் நாவினில் வசிக்கும் கலைமகள் அவதாரமான ஒரு பாட்டி இருந்தார். அவருக்கு ஔவையார் என்று பெயர். அவர் அருளுக்கு இருப்பிடம், அறத்திற்கு வேலி, கல்விக்கடல், குணக் குன்று. அவ்வூரிலிருந்தோர் அனைவரும் அவரைத் தெய்வமாக மதித்து வந்ததுடன், எந்தக் காரியமாயிருந்தாலும் அவரைக் கலந்தே செய்து வந்தனர்.

அவ்வூர் மன்னனும் அவரிஷ்டத்தை அறியாமல் எக்காரியமும் செய்ததில்லை. அம்மன்னன், மன்னர்க்கு மன்னன். தன்னுயிர் என்ன மன்னுயிர் மதிப்பவன். கமலக்கண்ணினன். கல் நவில் தோளினன். ஒன்னலர் தொழுதேத்தும் தாளினன்.

அன்னவன், அவ்வூரில், தன் தர்மத்தை நிலைநாட்ட ஓர் பள்ளிக்கூடம் ஏற்படுத்த உன்னினன். உன்னி, ஔவையாரை அணுகி, அவரிடம் தன் எண்ணத்தை வெளியிட்டான். ஔவையாரும் அதை அங்கீகரித்தனர். பல வறங்களிலும் மேலான அறமே யிது வென்னப் புகழ்ந்தது மன்றித் தன்னாலான உதவியைச் செய்வதாகவும் உறுதி மொழி கூறினர்.

பிறகு ஓர் நாள், சுபநக்ஷத்திரத்தில் அப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது.

ஏற்படுத்தப்பட்ட தினத்தில் ஔவையார் ஆங்குச் சென்றனர். அவரைக் கண்டதும், எல்லாப் பிள்ளைகளும் எழுந்து வணங்கினார்கள். அப்பொழுதவர், அச்சிறார்களின் சிரிமுகம் நோக்கி, "அன்பான குழந்தைகளே! இந்தச்சுபதினத்தில் உங்கள் வதனம் நோக்கி வார்த்தை ஆட நான் பாக்யம் பண்ணியிருந்திருக்கிறேன் போலும். இத்தினம், யான் உங்களுக்கு ஓர் விஷயம் உணர்த்தப் போகின்றேன். அதனை நீவிர் அனைவரும் கேட்கவேண்டும். கேட்டு, கேட்டபடி நடக்கவேண்டும். அதன்படி நீங்கள் நடந்தால் உங்களுக்கு ஒரு குறைவும் உண்டாகாது. நல்ல குணங்கள் விருத்தி

ஆகும். நினைத்த காரியங்கள் எல்லாம் நன்றாக நிறைவேறும், என்று கூறினர்.

தேனினுமினிய அவர் சொற்களைச் செவிவாய் மடுத்து நகந்த யாவரும் களிப்பு அடைந்தார்கள். பாட்டியைப் புகழ்ந்தார்கள். பின்னர், அவ்விஷயம் என்ன?—வென்றும் வினவினர்கள்.

அப்போது பாட்டியார், ஆண்டுச் சுவரில் மாட்டப்பட்டிருந்த ஓர் படத்தினை எல்லாருக்கும் சுட்டிக்காட்டினர். அதனைக் கண்டு ஆரும் ஆனைமுகன் படம் என அறிந்துகொண்டனர். உடனே ஔவையார், "என் அருமைக் குழவிகாள்! இதனைப்போன்ற படங்களை, நீங்கள், உங்கள் இல்லங்களில் பார்த்து இருப்பீர்கள். இப்படத்திலிருப்பவருக்குப் 'பிள்ளையார்' என்று பெயர். நமக்கு அப்பா இருக்கிறார் அல்லவா? அதே மாதிரி இவருக்கும் ஓர் அப்பா இருக்கிறார், அவர் எப்போதும் ஆத்திமாலை சூடுகிறவர். அதனால் அவருக்கு ஆத்திசூடி என்று பெயர் உண்டாயிற்று. அவருக்கு இவர்மேல் தான் அதிக ஆசை. இவரை நாம் எப்போதும் தொழுதல் வேண்டும். மணதார, இவரைத் தொழுகால் நமக்கு எக்காரியமும் எளிதில் கைகூடும். ஆகையினால், பிள்ளைகளே! ஆத்திசூடி அமர்ந்த இத்தேவனை நாம், எந்த வேலை செய்ய ஆரம்பித்தாலும் ஏத்திஏத்தித் தொழவேண்டும். உங்களுக்கு எக்கஷ்டம் வந்தாலும் இதனை மறக்கொணாது," என்றுபதேசம் செய்தனர்.

பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்ட அத்தினம் முதல், நாள் தவருது, எல்லாப்பிள்ளைகளும் ஆத்திசூடி அமர்ந்ததேவனை ஏத்திஏத்தித் தொழுவோம் நாமே என்று வேண்டிவந்தனர்.

ஔவையாரும் ஆநந்தம் அடைந்து, பிரதிதினமும் அப்பள்ளிக்கூடத்திற்குப் போய் உபதேசம் செய்துவந்தனர்.

குறிப்பு:—மறுமாதம் ஔவையாரின் முதல் உபதேசம் வெளிவரும்.

லால்குடி சே. கந்தசாமி, தமிழ் ஆசிரியன்,

குடியாத்தம்,

(வட ஆற்காடு ஜில்லா.)

210456

மலையைவிழுங்கிய

மகாதேவன் கதை.

இது, ஓயாச்சிரிப்பைத்தரும் ஒரு மாயாவிநோதக்காரன் கதை. இதில் காதேவனென்ற ஜெகஜாலப்புரட்டன், இளமையிலேயே இந்திரஜாலங்களைச்செய்து ஜனங்களை ஏமாற்றுவது, மலையை விழுங்குகிறேனென்று ஒரு பிரபுவையும் ஊர் ஜனங்களையும் ஏமாற்றுவது, மாயமுயல்களை வளர்த்து தஞ்சாவூர் எத்தர்களை ஏமாற்றி, அந்த முயலை விலைக்குக் கொடுத்து அவர்களுடைய ஐவேசுகளையெல்லாம் கைப்பற்றிக்கொள்வது, சாமியார் வேஷம் போட்டு உயிரோடு சமாதியாகி மனிதர்களை ஏமாற்றுவது, தஞ்சாவூர் எத்தர்களின் மூக்கைக் கத்தரித்து அவர்களைச் சொல்லாமலோடும்படி செய்வது; தாசிகளை ஏமாற்றி ரயிலில் சக்கின்கிளாஸ் வண்டியில் பிரயாணஞ்செய்வது, ரயிலில் சென்ற நாட்டுப்புறத்தானைச் சக்கின்கிளாஸ் வண்டியில் ஏறச்செய்து போலீஸ் சங்கடத்தில் மாட்டிவைப்பது முதலிய பல விநோத செய்கைகளெல்லாம் அடங்கி யிருக்கின்றன. விலை அணா 6.

விநோதகதைத் திரட்டு.

இது, அடங்காச்சிரிப்பை யுண்டாக்கி, அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கும் பலகதைத் தொகுதிகள் அடங்கிய புத்தகம். இதில், தமிழ்ப்பாவிருப்பக் கதை, கூட்டத்திற்புகுந்து வாட்டமடைந்தவர் கதை, அதிகப்பேச்சால் அவஸ்தையடைந்த கதை, பேராசைபெருநஷ்டமான கதை, பெருங்குடியர் இருவர் கதை, பெண்பிள்ளை திருடனைப்பிடித்த கதை, நெளிகொடுத்தகதை, செருக்கால் தீங்கடைந்த கதை, திருடர்கள் வித்வானுக்குச் சன்மானஞ் செய்த கதை, விஷயம் தெரியாமல் சண்டையிட்ட கதை, பெருங்காயம் வாங்கிய கதை, சிலேடைப்பேச்சால் அவமானமடைந்தவன் கதை, விநோத சிலேடைக் கதை, பகல் திருடன் கதை, வாக்குச்சாதுரியத்தால் இலாபம்பெற்ற புலவர் கதை, செம்பும்போனதே கோவிந்தா என்ற கதை, சிலேடைப்புலவர் கதை, பேர்போன செவிடன் கதை, பஞ்சலக்ஷணக் கதை, ஒரு சிலேடைக்கதை, கொடாக்கண்டன் கதை, விபூதியால் செல்வங்கொடுப்பவன் கதை, கொசுகு சிங்கத்தை வென்ற கதை, தென்னமரத்தில் புல்பிடுங்கின கதை, புலியிடம் வட்டிக்கணக்குத் தீர்க்கப்போன செட்டியார் கதை, தாடிக்குத் தர்க்கம்பேசிய சாமியார் கதை, கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற் போனகதை, செல்லாததற்குச் செட்டியார் இருக்கிறார் என்றகதை, வேலை கடுமையானவேலை எஜமான் இன்னொன்றுதெரியவில்லை என்ற கதை, நன்றியுள்ள எருதின் கதை ஆகிய சுமார் முப்பது கதைகளுக்குமேல் அடங்கி யிருக்கின்றன. சகலரும் வாங்கிப்படிக்கத் தகுந்த அருமை வாய்ந்த புஸ்தகம். விலை அணா 5 தான்.

ஸ்ரீபாலன்.

படிக்கப்படிக்க இனிமையைத் தரும் மகா அற்புதம் வாய்ந்த கற்புள்ள நாவல். நவரசங்களும் பொருந்தியது. மனதிற்கு ஆனந்தத்தைக் கொடுப்பது. விலை அணா 10.

உதயணன்.

இது, மனதைக் கவரத்தக்க மகாமேன்மை தங்கிய தமிழ் நாவல். சிற
வித்வானால் எழுதப்பட்டது. பள்ளிக்கூடத்து மாணவர்களும், மற்றவர்களு
விரும்பிப் படிக்கத் தகுந்தது. அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கத்
தது. விலை அணா 8.

நரிவிருத்தம் மூலமும் உரையும்.

இந்நூல், சீவகசிந்தாமணியை இயற்றிய ஆசிரியராகிய திருத்தக்க தே
ரால் செய்யப்பட்டது. வித்வான்களும் உச்சிமேற் கொள்ளத் தக்கது. விரி
உரையோடு கூடியது. உயர்ந்த நீதிகளைப் போதிப்பது. எவரும் எளிதி
படித்துணரத் தக்கது. விலை அணா 4.

சீவகசிந்தாமணி வசனம்.

இது, சீவகசிந்தாமணிச் செய்யுட்களைத் தழுவி யெழுதப்பட்டது. இதில்
நாமகள் இலம்பகம், கோவிந்தையார் இலம்பகம் இரண்டும் அடங்கி யிருக்கின்
றன. விலை ரூ. 1—4—0

மேருமந்தர புராணம் மூலமும் உரையும்.

1-வது சருக்கம் விலை அணா 6
2-வது சருக்கம் விலை அணா 5
3-வது சருக்கம் விலை அணா 8

ஜினபாரதம் விலை அணா 6
சமந்தபத்திராசாரியரின் திவ்ய சரித்திரம் விலை அணா 1
ஸ்தோத்திரச் செய்யுட் கோவை விலை அணா 1
ஜீவசம்போதனை முதற்பாகம் விலை அணா 12

கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை.

இப்புத்தகத்தில் ஆனந்தமாய் அமைந்துள்ள ஒவ்வொரு அத்தி
யாயத்தைப் படிக்கப் படிக்க ஆனந்தம் உண்டாகும். புத்தகத்தைக்
கீழேவைக்க மனம் வராது. வயிறு குலுங்கச் சிரிப்புண்டாகும்.
இதில், வாயாடிச்சுப்பி மணப்பேச்சு, தாலிகட்ட மறந்து செய்யுங்
கலியாணம், கலியாணத்தில் அம்பட்டன் அவஸ்தை, மாப்பிள்ளைக்கு
மீசை மொட்டையாதல், கலியாணத்தில் பஞ்சாங்கக்காரர் கலகம்,
கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்து விடுவது, கலியாணப்
பெண்ணே பந்திபரிமாறும் வேடிக்கை, விநோத ஊர்வலம், சுப்பம்
மாளின் வேடிக்கை இல்வாழ்க்கை, சித்திரக் குள்ளியின் தெய்வ
பக்தி, சுப்பம்மாளின் கெட்டிக்காரத்தனம், சுப்பம்மாளின் கற்பு
லக்ஷணம், மண்ணை நம்பி மாமிருக்க மரத்தை நம்பி யிலையிருக்க
உன்னை நம்பி நானிருக்க உலகம் பொறுக்கவில்லை என்பது, இரத்
தினசாமி பிள்ளையினுடைய இல்வாழ்க்கை முடிவு, முதலிய பல
விநோத விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. வேண்டியவர்கள்
அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

தருமசீலன் புக்டிபோ,
1/2 பாலகிருஷ்ணன் சந்து, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை